ஊராட்சி படிவம் எண் : 6

பலவகை வரவு ரசீது

அசல்

பற்றுச் சீட்டு A

புத்தக எண் :

நாள் : 14/3/2024 2333

..... ஊராட்சி

திரு ..... கிராமம் ..... என்பவரிடமிருந்து

ரூபாய் ..... (ரூபாய் ..... மட்டும்

..... வகைக்காக பெற்றுக்கொள்ளப்பட்டது

பணம் செலுத்துபவரின் கையொப்பம்

வரி வசூலிப்பவர்

ஊராட்சி தலைவர்

குறிப்பு :

1. இந்த பற்றுச் சீட்டு ஊராட்சி தலைவரின் Facsimile-யும் மற்றும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும் இருந்தால்தான் செல்லுபடியாகும்
2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட வேண்டும். இடதுகை பெருவிரல் ரேகை பெறும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரதிகளிலும் பெற வேண்டும்

மாம்பள்ளம் ஊராட்சி மன்ற தலைவர் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை- திரு ச.சம்பத்

ந.க.எண்.01/2023–2024/ நாள். 14 .03 .2024

பொருள் – மனைப்பிரிவு –நகர் ஊராமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் திருவள்ளூர் மண்டலம் - திருவள்ளூர் மாவட்டம் - எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் – மாம்பள்ளம் ஊராட்சி காதர்வேடு கிராமம் சர்வே எண்:- 57/2A2 – ல் 4050 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவு வரைபடம் மற்றும் தொழில் நுட்ப அனுமதி வழங்கியதற்க்கு இறுதி ஒப்புதல் அளித்தல் - சார்ந்து

பார்வை – 1. நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், திருவள்ளூர் அவர்களின் கடித எண் ROC NO:-UH6GHM6M/2023/TCP நாள்:-04.10.2023
2. அரசாணை நிலை எண்:79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:-04.05.2017
3.தானப்பத்திரம் எண்:-6182/2023 நாள்:-20.09.2023
4. ஊராட்சி தீர்மானம் எண்:-32/2023-2024, நாள் 07.03.2024

உத்திரவு:

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துகோட்டை வட்டம், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த மாம்பள்ளம் ஊராட்சி காதர்வேடு கிராமத்தில் சர்வே எண்:- 57/2A2 – ல் 4050 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு மனைப்பிரிவு வரைபடம் நகர் ஊரமைப்பு இணை இயக்குனர், திருவள்ளூர் அவர்களின் பரிசீலனை செய்யப்பட்டு தொழி நுட்ப அனுமதி பார்வை -1 ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை:- 2–ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தவேண்டிய தொகைகளை செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் கீழ்காணும் விவரப்படி அரசுக்கு செலுத்தவேண்டிய தொகைகளை உரிய தலைப்புகளில் செலுத்தியுள்ளார்.

வ எண்	சர்வே எண்	மனை மொத்த அளவு ச.மீ.	தானம் வழங்கப்பட்ட பொது உபயோகம் போக மீதமுள்ள மனையின் அளவு	சந்தை மதிப்பு ஏக்கருக்கு ரூ5000000/- ரூ 114.78/- சதுர அடி	3% Market Value ரூ
1	57/2A2	1 Acre (or) 4050 Sq.M	2762.00 Sq.M (or) 29730.16 Sq Ft	5000000/–	150000
2	கூராய்வு கட்டணம் மனை ஒன்றுக்கு ரூ.1000/-		29 மனைகள்	29*1000	29000
3	ஒப்புதல் கட்டணம் ஏக்கருக்கு ரூ. 1000/-			1*1000	1000
4	கூர்ந்தாய்வு கட்டணம்				1000
5	கொடி நாள் (Flag Day)				10000
மொத்தம்					191000

அரசு தலைப்பில் செலுத்தியது ;-150000/- Challan Number 20240313017975 Arumbakkam Branch IDIBI Bank IBKL240313522549/13.03.2024 அன்று செலுத்தப்பட்டுள்ளது.
ஊராட்சிக்கு செலுத்தவேண்டிய தொகை:-31000/- D D NO:-032518/13.03.2024 IDIBI Bank Arumbakkam கிளையில் செலுத்தப்பட்டுள்ளது.
Flage day Amount :-10000/- D D NO:-032519/13.03.2024 IDIBI Bank Arumbakkam கிளையில் செலுத்தப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த மாம்பள்ளம் ஊராட்சி காதர்வேடு கிராமம் சர்வே எண்:- 57/2A2 – ல் 4050 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் பின்வரும் நிபந்தனைகளுடன் அளிக்கப்படுகிறது

நிபந்தனைகள்

1. மனைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம், ஊராட்சியின் வளர்ச்சி குழுமத்தின் நிபந்தனைகளின்படி எல்லைகற்களால் வரயறுக்கப்படவேண்டும். மனைப்பிரிவிற்க்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக்கற்களை கொண்டு மனுதாரர் நிர்வாக அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்க்கும் அகலத்திற்க்கும் அமைக்கப்பட்டு தார்சாலை அமைக்கப்படவேண்டும்.

2. மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்க்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.

3. தெரு மூலைகளில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி திருப்பத்தோடு (SPLAY) அமைக்கப்படவேண்டும்.

4. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே க'்டப்படவேண்டும். தவிர எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அள்வுகளையோ, அமைப்பையோ மாறுபடுத்தும் வகையிலெந்த மனையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ மாறுபட்ட உபயோகத்திற்கோ பயன்படுத்தகூடாது.

5. அங்கீகரிக்கபட்ட மனைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

6. L.T Line மனைகளின் குறுக்கே உள்ளதை எடுப்பதற்க்கும், அல்லது மாற்றி அமைப்பதற்க்கு TNEB –க்கு பணம் செலுத்தப்படவேண்டும் அப்பணி முடிவுற்றதா என்பதை ஊர்ஜிதம் செய்துகொள்ளவேண்டும்.

7. H.T Line-க்குகீழ் மனைகற்க்கல்/மனைகள் அமைத்தல் கூடாது. காலியாக இருக்க வேண்டும் என்பதை ஊர்ஜிதம் செய்துகொள்ளவேண்டும்

8. பூங்காக்கள் TNEB –க்கு ஒதுக்கிய இடம் Public purpose Area ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் ஊராட்சிக் கட்டுபாட்டின் கீழ் கொண்டுவரவேண்டும்.

9. அடிப்படை வசதிகளான குடிநீர் விநியோகம், கழிவுநீர் வடிகால்வாழ் மற்றும் தெரு மின் விளக்குகளுக்கான மின் இணைப்பு இருக்க வேண்டும். அனைத்தும் சம்மந்தப்பட்ட உரிமையாளரால் பணிகள் செய்து முடித்து தரப்படவேண்டும்.

10. மனை வரைமுறைபடுத்தும் திட்டத்தில் தாங்கள் அளித்த ஆவணங்கள் முறைகேடான ஆவணங்கள் என பின்வரும் காலங்களில் கண்டறியப்பட்டால் அனுமதி இரத்து செய்யப்படும்.

11. மனைபிரிவு இடம் 1984 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தும் சட்ட பிரிவு 4(1) –ன் படி நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலம் சீர்த்திருத்த சட்டம் 1961 தொடர்பாக விதிமுறைகள் ஏதேனும் மீறப்பட்டிருந்தால் மனைப்பிரிவு அனுமதி இரத்து செய்யப்படும்

என மேலே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம்,மாம்பள்ளம் ஊராட்சி காதர்வேடு கிராமம் சர்வே எண்:- 57/2A2 – ல் 4050 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் அமையும் குடியிருப்பு மனைக்கான வரைபடத்திற்க்கு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு வரைபட இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

ஊராட்சி மன்ற தலைவர்/நிர்வாக அதிகாரி
மாம்பள்ளம் ஊராட்சி
எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்
P.வெங்கடேஷ்குமார்
எண்:-15/49 திருநகர்
12-வது தெரு
வில்லிவாக்கம்
சென்னை-49